**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**<u>CC.NO- 243/2019</u>**

**Dated :24.02.2026**

**Deposition of witness for : P.W.2**

**List of Witness LW7 Examined as PW2 ( Mahazar Witness)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலசுப்பிரமணியம் | வயது | : | 53 |
| தந்தை பெயர் | : | மருதமுத்து | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | துருசுப்பட்டி | தொழில் | : | விவசாயம் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**<u>சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கடந்த 18.10.2018 ஆம் தேதி, இரவு சுமார் 08.00 மணிக்குள், கந்தர்வக்கோட்டையில் உள்ள சிவன் கோவில் ஆர்ச் அருகில் நானும் முனியாண்டி என்பவரும் பானிபூரி கடையில் பானிபூரி சாப்பிட்டுக்கொண்டிருந்தோம். அப்போது, அங்கு காவல் ஆய்வாளர் அன்றைய தினம் மதியம் விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து எழுதிக்கொண்டார்கள். நானும் முனியாண்டி என்பவரும் அதில் சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரிலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **(மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) வழக்கு விபத்தில் இறந்து போனவர் எனக்கு உறவினரா என்றால் இல்லை. நான் வழக்கு சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் சம்பவத்தின் போது சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான். என்னிடம் காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரியல்ல, வரைபடம் வரைந்த இடத்தில் வைத்து வாங்கினார்கள். வரைபடம் எங்கு வைத்து வரைந்தார்கள் என்றால் சிவன் கோவில் ஆர்ச் அருகில் வைத்து வரைந்தார்கள். நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.02.24 15:28:27 +0530

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**